# பத்துப்பாட்டு

– மைக்கேல்

நாலு ரோடு சிக்னல். பச்சை நிற அம்பு ஒளிக்கு இன்னும் ஆறு நொடிகளே உயிர் இருப்பதாக அந்த டிஜிட்டல் கவுண்ட் டவுன் சொல்லவே அப்பா பைக்கை சிறிது வேகமாக செலுத்தினார். மாணிக்கம் அங்கிளும் எங்களைத் தொடர்வதைப் பார்த்தேன். எங்கள் இருவர் கண்களும் சந்தித்தன. எனக்கும் அப்பாவுக்கும் நடுவே உட்கார்ந்திருந்த தங்கையிடம் கிசுகிசுத்தேன், “நிலா, சிக்னல்ல ஏழரை ஆரம்பிக்கப் போவுது”

“டேய் இன்னும் மணி ஆறு கூட ஆவல... லூசு மாதிரி ஏழரைங்கற?”
அதற்குள் சிவப்பு நிற வட்ட ஒளி எங்களை நிறுத்த... மாணிக்கம் அங்கிள் எங்களுக்கு வலது புறமாகத் தன் ஹோண்டா சிட்டி காரை நிறுத்திக் கண்ணாடியை இறக்கி சத்தமாகப் பேசினார், “என்ன ஞானராஜ் எப்டி?”
அப்பாவும் பதிலுக்குக் கத்தினார், “நல்லாருக்கேன்.”
“என்ன பாப்பா, எத்தனாவது ராங்க் வாங்கியிருகே?” நிலாவுக்கு இப்போது தான் என் கிசுகிசுப்பின் அர்த்தம் புரிந்ததாக என்னைத் திரும்பிப் பார்த்தாள்.

மாணிக்கம் அங்கிளுக்குப் பத்தாம் வகுப்பு படிக்கும் அவரது ஒரே மகன் சந்திரனைப்பற்றிப் பீற்றிக் கொள்வதையே முழுநேர வேலையாக வைத்திருக்கிறார். பகுதி நேரமாக ரியல் எஸ்டேட் பிசினஸ் வைத்திருக்கிறார்.

தன் மகனைப் பொன் என்று சொல்ல எல்லா காக்கைகளுக்கும் உரிமை உண்டு. ஆனால் மற்றவர்களின் பிள்ளைகளை மட்டம் தட்டும் அவர் புத்தியால் தான் அவரை கண்டாலேயே, அதுவும் எங்கள் அப்பாவிடம் அவர் பேசினால் - எங்களுக்கு ரிக்டர் ஸ்கேலில் மூன்று முதல் நான்கு புள்ளிகள் அளவுக்கு நடுக்கம் எடுக்கும்.

“இப்போ தான் அங்கிள் ஸ்கூல் தொறந்து ஒரு மாசம் ஆயிருக்கு. இதுவரைக்கும் எக்ஸாம் ஒண்ணும் நடக்கலியே?” நிலா சீரியஸாகப் பேசுவதுபோல் அங்கிளுக்கு ஒரு மூக்கறுப்பு கொடுத்தாள். மெதுவாக அவள் காலில் ஒரு தட்டுத் தட்டி அவளை அடக்கினேன்.

“நல்லாக் கேளுங்க மாணிக்கம்.” அப்பா மெதுவாகத் தான் சொன்னார். அது நிலாவுக்குக் கேட்கவேண்டும் என்பது தான் அப்பாவின் மனதில் இருக்கிறது என்பது எனக்குத் தெரிந்தது. அப்பாவின் எரிச்சல் எனக்குள் ஐந்தாம் புள்ளி பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. பச்சை சிக்னல் தற்காலிகமாகக் காப்பாற்றியது. ஆனால் அப்பா உர் என்று தான் வந்தார்.

வீட்டுக்குப் போனதும் நிலா டிவியை ஆன் செய்தாளோ இல்லையோ அப்பாவின் ஆலோசனைக் காண்டமும் புலம்பல் புராணமும் துவங்கிவிட்டது.
“ஏண்டி பத்தாங்கிளாஸ் வந்தாச்சு. மரியாதையா உக்காந்து படிக்கறத உட்டுட்டு எப்பப்பாத்தாலும் ஊர் சுத்துறதும் டிவி பாக்கறதுமா ”

“என்னங்க சும்மா அவள டார்ச்சர் பண்ணிட்டு இருக்கீங்க? அவ படிக்கத்தான் செய்றா.”

அம்மாவுக்குப் பதிலாக ஒரு சாஃப்ட் கெட்ட வார்த்தையை அப்பா டெலிவரி செய்தார். அம்மா விசும்பலுடன் அடுத்த அறையில் அகதியானார்கள்.

தாத்தா சட்டென வாக்கிங் கிளம்பினார். நூறு டிகிரிக்கு மேல் கோபம் வந்தால் இப்படித்தான் தாத்தா செய்வார். நிலா தன் பாடப்புத்தகத்துக்கு முன்னே தன் அழுகைக் கச்சேரியைத் துவங்கியிருந்தாள். அவள் ஆசை ஆசையாய் செலக்ட் செய்து வாங்கியிருந்த வளையல்கள், பாசிகள், ரப்பர் பேன்ட்கள், பென்சில்கள், கலர் பாக்ஸ் எல்லாம் இருந்த ப்ளாஸ்டிக் பையை சொத் என்று அவள் முன் போட்டுவிட்டு "இந்த வீட்டுக்குள்ள நுழையவே பிடிக்கல" " என்ற முணுமுப்புடன் அப்பா வெளியே போனார். பைக் உதைக்கப்பட்டு, த்ராட்டில் முறுக்கப்பட்டு காம்பவுண்ட் திறந்தே விடப்பட்டிருந்தது.

இரவு சாப்பாட்டுக்கு அப்பா வரவில்லை. அம்மா சாப்பிடாமல் உட்கார்ந்திருந்தார்கள்; இன்னும் மூக்கை உரிஞ்சிக்கொண்டிருந்தார்கள், கண்கள் சிவப்பு ரேகைகளுடன் நீர்திரை மூடி இருந்தன. தாத்தாவும் பாட்டியும் வராண்டாவில் சத்தமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில் எம்.பி த்ரீயில் பாட்டுக் கேட்பது எனக்குள் குற்ற உணர்வை ஏற்படுத்தியிருந்தது ஆனாலும் பாடல்கள் என் மனதை அமைதியாக வைத்திருந்தது.

"மாமா நீங்க சீக்கிரமாத் தூங்கப் போகணும்னு டாக்டர் சொல்லியிருக்காரே?" அம்மா தயக்கமாகச் சொன்னார்கள்.
"இதுக்கு மேல என்னால பொறுத்துட்டு இருக்க முடியாது"
"கொஞ்சக்காலமா வீடு அமைதியா இருந்தது, அவனுக்குப் பொறுக்கல" பாட்டியம்மா கமென்ட் அடித்துவிட்டு சோஃபாவில் படுத்துக் கொண்டார்கள்.

நானும் என் புத்தகத்தைத் திறந்து கொண்டே வரப்போகும் செகண்ட் ஷோவை எதிர்பார்த்திருந்தேன். அப்பா பத்து மணிக்கு வந்தார். சாப்பாட்டைப் புறக்கணித்து லுங்கியை நாடியபோது ஆதரவை வாபஸ் வாங்கும் கூட்டணிக்கட்சித் தலைவரைப் போல தாத்தா அப்பாவை டைனிங் டேபிளில் உட்காரவைத்து பேச்சு வார்த்தையைத் துவங்கினார். தாத்தாவின் முதல் கேள்வி முடிவதற்குள்ளேயே அப்பா இரண்டாம் பதிலைத் துவங்கினார்.
"உங்க காலம் மாதிரி இல்ல இப்போ. ஸ்டேட் ராங்க், கோல்ட் மெடல் வாங்கினவங்க எல்லாருமே வேலை இல்லாம சும்மா இருக்காங்க. இவ மகாராணி மாதிரி லூட்டி அடிக்கறா, நீங்க எல்லாரும் அவளுக்கு சப்போர்ட் பண்ணிட்டு இருக்கீங்க ரோட்டுல எல்லாரும் அவ என்ன ரேங்க்னு கேக்கறாங்க. எனக்கு மானமே போவுது. வீட்டுக்கு வந்தாலே டென்ஷன் ஏறுது."

"டேய் நீ எப்படிப் படிச்சுக் கிழிச்சு, என்ன ரேங்க் வாங்கினேன்னு மறந்துட்டியா?" அப்பாவின் வாயை தாத்தா நச் என்று அடைத்தார். ஒரு பந்து ஒரு ரன் இருக்கும் போது தூக்கி அடித்து கேட்ச் கொடுத்த பாட்ஸ்மேன் மாதிரி இருந்தது அப்பாவின் நிலைமை.

"டேய் ஞானா, நீ இப்படி வேலைக்கு வந்து இப்படி அருமையான குடும்பம் நடக்கும்னு நாம யாராவது கனவு கண்டிருப்போமா? மரத்த வச்சவன் தண்ணி ஊத்துவான் அப்படின்னு சொல்லுவாங்க. உனக்கு உதவி செஞ்ச ஆண்டவன் உம் பிள்ளைகளுக்கும் உதவி செய்வாரம்னு ஏன் உன்னால நம்ப முடியல? 'நான் பட்ட கஷ்ட்டம் எம் பிள்ளைங்க பட வேண்டாம், என்ன விட நல்ல நிலைக்கு அதுங்க வரணும்'னு நீ அடிக்கடி சொல்றது சரிதான். ஆனா உன்னோட உள்நோக்கம் தான் சரியில்லன்னு நான் நினைக்கிறேன். மாணிக்கம் மாதிரி உன்னால கார் வாங்க முடியலன்னு உனக்கு ஒரு எரிச்சல். பிள்ளைங்க நல்லா படிச்சு அதிகம் சம்பாதிச்சாத்தான் நல்லா இருப்பாங்கன்னு யாரு சொன்னா உனக்கு."

அம்மாவும் அப்பாவும் தரையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். பாட்டியம்மாவுக்கு தூக்கம் கலைந்திருந்தது.

“அடுத்தவங்க எதிர்பார்ப்புக்கு ஏத்தமாதிரி வாழணும்னு நினைக்கிறவங்க அட்ரஸ் இல்லாத மனுஷங்க மாதிரி. உம் பொண்டாட்டி பிள்ளைங்க முன்னாடி உன்னத் திட்டிட்டேன்னு வருத்தப்படாதே. நாங்க ரெண்டு பேரும் வாழ்ந்து முடிச்சுட்டோம். நீ பாதி தாண்டிட்டே. இந்தச் சிறிசுங்க ரெண்டும் இப்பத்தான் வாழ ஆரம்பிச்சிருக்குதுங்க. ஆரம்பத்திலேயே அதுங்க மனச புண்ணாக்கிடாதே. உன் ஹோண்டா சிட்டி ஃப்ரெண்ட் படிக்காமலேயே இவ்வளவு பெரிய பிசினஸ் வச்சிருக்கார். உங்கூட படிச்சு யுனிவர்சிட்டி ராங்க் வாங்கின பிரசாத் ஏதோ ஒரு ஸ்கூல்ல கம்ப்யூட்டர் வாத்தியாரா டெம்பரரி வேல பாக்கறான்னு சொல்லியிருக்கே. நீயும் கிரிக்கெட்ட வச்சுத்தான் இந்த வேலைக்கு வந்தே. கடவுள் நினைச்சா எப்படியும் நம்மை உயர்த்த முடியும். பணம் சம்பாதிக்கறது தான் பெரிசுன்னு நினைக்காதே. ”

அப்பா மெதுவாக அறைக்குள் போனார். தாத்தா, பாட்டியும் படுக்கப் போக, நிலா மட்டுமல்ல நானும் என் பாடபுத்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்கப் போனோம். அம்மா ஃப்ளாஸ்க்கைத் தேடிக் கொண்டிருந்தாள் எங்களுக்கு டீ போட்டு வைக்க.